வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

பங்குனி – சித்திரை 2015 நிலா | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 32

## பிரான்ஸ் மாவட்ட தேர்தல் 2015




**பிரான்சில் இன்று வரை** ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற மாகாணசபை, சட்டமன்ற செனட்சபை, வட்டாரசபை மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் எனத் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. இதில் வட்டாரசபைத் தேர்தலின் (éléctions cantonales) புதிய வடிவமே! மார்ச் 22 மற்றும் 29ம் திகதிகளில் நடைபெறும் மாவட்டத்தேர்தலாகும் (élections départementales). 2013ல் அமுலுக்கு வந்த புதிய தேர்தல் சட்டமாற்றங்களுக்குப் பின்னரான முதலாவது தேர்தல் இது. முதல் முறையாக ஆண், பெண் வேட்பாளர்கள் ஒன்றாக ஒரே வேட்பாளராக போட்டியிடுகின்றனர்.

6 வருடங்களுக்கு ஒரு முறை நடக்கவிருக்கும் இத்தேர்தலில் தெரிவாகும் (Binômes) இருபால் வேட்பாளர்கள் தமது மாவட்ட ஆலோசனைக்குழுச் செயற்பாட்டாளர்களாக இயங்குவர்.

9097 இருபால் வேட்பாளர்களாக மொத்தம் 18194 வேட்பாளர்கள் 22 மாகாணத்தில் 101 மாவட்டங்களில் 2054 வட்டாரங்களில் (Cantons) போட்டியிடுகின்றனர். பாரிஸ் நகர ஆலோசனைக்குழு நிர்வாகிகள் மாநகரசபைத் தேர்தலின் போது தெரிவு செய்யப்படுவதால் பாரிஸ் நகரின் தேர்தல்கள் நடக்காது. இது ஒரு சாதாரண மாவட்டத்தேர்தல் என்ற பொழுதிலும் கட்சிகளின் அடிப்படையில் தேசிய அளவில் பெரும் மாற்றங்களை கொண்டு வரும் வல்லமை மிக்கது. டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் மாகாணசபைத்தேர்தலிலும் குறிப்பாக 2017ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலிலும் அழுத்தமான தடங்களை பதிக்கவுள்ளது. இத்தேர்தல் ஜனாதிபதி தேர்தலுக்கான முதற்படியாகவே சகல அரசியற் கட்சிகளாலும் கருதப்படுகின்றது. ஆண் பெண் சமத்துவம் இதுவரை அரசியல் பரப்பில் பேச்சாக மட்டும் இருந்து வந்த நிலையில் இத்தேர்தலில் இருபால் வேட்பாளர்கள் மூலமாக செயற்படுத்தப் பட்டுள்ளதும் இத் தேர்தலுக்கு இன்னும் முக்கியத்துவத்தைக் கூட்டியுள்ளது.

கருத்துக்கணிப்புகள் (FN) தேசிய முன்னணிக்கட்சிக்கு முதல் சுற்று வெற்றி நிச்சயம் என்கிறது. மரின்லூப்பென்னும் பல மாவட்டங்களை தங்கள் வசப்படுத்த வேட்பாளர்களை முடுக்கிவிட்டுள்ளார். (PS) சோசலிசக் கட்சி மேலும் தோல்விகளை சந்தித்து மாவட்டங்களை இழக்குமாயின் இத் தேர்தல் ஆளும் கட்சியை நிச்சயமாக வலுவிழக்கவே செய்யும். இந்நிலை தொடர்ந்து 2017ல் ஆட்சி அமைப்பதற்கு பாதகமாக அமையும். இந்த இக்கட்டான சூழலினாலேயே மனுவல் வால்சும், சோசலிசக் கட்சியினரும் தீவிரமாகச் செயற்படப் பணிக்கப்பட்டுள்ளனர்.

UMP சார்க்கோசியின் மீள் வருகையையும் கட்சியின் இருப்பையும் தக்க வைக்க அல்லது நிரூபிக்க இது சரியான தருணம். UMP க் கட்சி UDI (Union des démocrates et indépendants கட்சியுடனான

(2ம் பக்கம் பார்க்க)




## பிரான்ஸ் அரசியலில் மக்களின் பேராதரவை பெற்றுவரும் அரசிகள்!

**பெண்களுக்கான** உரிமைகள், ஆண் பெண் சமத்துவம், பாதுகாப்பு, பெண்உடல் அரசியல், சாதனைப் பெண்களுக்கு மரியாதை மற்றும் பேரணிகள், ஒன்றுகூடல்கள் எனப் பல நிகழ்வுகளோடு சர்வதேச பெண்கள் தினம் மார்ச் 8 அன்று உலகெங்கும் நினைவு கூரப்பட்டது

(2ம் பக்கம் பார்க்க)

நிலா
www.nilafrance.com
தொடர்புகளுக்கு :
சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94
sangeethafrance@gmail.com






...1 ம் பக்கத் தொடர்ச்சி.

பெண்கள்தினம் முதன்முறையாக 1910ல் அமெரிக்க பெண் சோசலிஸ்டுகளால் முன்னெடுக்கப்பட்டது. இன்று சிறப்பிக்கப்படும் "பெண்கள் தினம்" ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச மயப்படுத்தப்பட்டு 1977ல் சர்வதேச பெண்கள் தினமாக மாற்றம் பெற்றது.

பெண் உரிமைகள், சமத்துவம் என்று பேசப்பட்டாலும் அதிகாரங்கள் ஆண்களின் கைகளிலேயே உள்ளது. குறிப்பாக அரசியல் அரங்கில் பெண்கள் செல்ல வேண்டிய தூரங்கள் இன்னமும் அதிகமாகவேயுள்ளது எனப் பிரான்சின் பல பெண் அரசியற் செயற்பாட்டாளர்கள் போர்க் குரலெழுப்புகிறார்கள்.
இந்நிலையில் சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டு எடுக்கப்பட்ட கருத்துக்களமொன்றில் முதல் முறையாக பிரான்ஸ் மக்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் பிரான்சின் அதிபர் பதவியை ஒரு பெண் வகிக்கமுடியும் எனவும், ஒரு நாட்டைச் சிறப்பாக ஆளுவதற்கு ஆண், பெண் என்ற பேதம் இடையூறாக இருக்க வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இக்கருத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் பிரான்ஸ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தவிருக்கும் 20பெண்ஆளுமைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் முதல் மூன்று இடங்களை முறையே Christine Lagarde, Marine Le Pen, Ségolène Royal ஆகியோர் பிடித்துள்ளனர்.

**Christine Lagarde - (FMI) :** சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குனர் வாசிங்டனில் கோலோச்சும், பிரான்ஸ் பெண்களின் கனவுப் பெண்மணி. உலக அளவில் அதிகாரங்களை கையில் வைத்திருக்கும் பெண்கள் வரிசையில் ஐந்தாவது இடத்திலுள்ளார். இங்கு முதலாவது இடத்தை தக்க வைத்திருப்பது ஜேர்மன் அதிபர் அங்கேல்மேர்க்கல். UMP கட்சியைச் சேரந்த இவர் சார்க்கோசியின் அரசில் பொருளாதாரத்துறை அமைச்சராக செயற்பட்டவர் .

**Marine Le Pen : (FN)** தேசிய முன்னணிக்கட்சியின் இணையில்லாத் தலைவி. பிரான்சில் இவர் இரண்டாவது இடத்தில் இருப்பது ஆச்சரியமல்ல. காரணம் 2012 முதல் பிரான்ஸ் மக்களின் சாதகமான கருத்துக்குள்ளேயே இருந்து வருபவர். பிரான்ஸ் அரசியல் அரங்கில் தவிர்க்கமுடியாத ஆளுமை. குறிப்பாக 18 முதல் 24 வயதானவர்களின் மத்தியில் முதலிடம் வகிக்கும் அரசியல் தலைவி. இதுவரை இளையவர்கள் மத்தியில் முதலிடத்திலிருந்து வந்த கல்வி அமைச்சர் Najat Vallaud Belkacem பின்தள்ளியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**Ségolène Royal :** பிரான்சின் தற்போதைய சுற்றுச்சூழல் அமைச்சர். சோசலிசக்கட்சியின் இரும்புப் பெண்மணி. பிரான்ஸ் மக்களுக்கு அதிகம் பிடித்தது அவரின் போராட்ட குணம். 2007ம் ஆண்டு பிரான்ஸ் அதிபர் தேர்தலில் சார்க்கோசிக்கு கடும் போட்டியாளராய் விளங்கியவர். உட்கட்சி குழப்பங்களால் பின் தள்ளப்பட்டாலும் தனது தீவிரமான போராட்டக்குணத்தால் இன்று மீண்டும் சோசலிசக்கட்சியிலும், அரசியல் அரங்கிலும் நிமிர்ந்து நிற்பவர்.

தற்போது பிரான்ஸ் அரசியல் அரங்கில் தொடர்ந்து ஆண் பெண் சமத்துவம் பேசப்பட்டாலும் பாராளுமன்றத்தில் பெண்கள் 27 சதவீதமே அங்கம் வகிக்கின்றனர். இன்று மக்களின் பேராதரவைப் பெற்றுவிட்ட பின்னர் அதிகாரங்கள் கைமாறி முதல் முறையாக பிரான்ஸ் குடியரசு ஒரு பெண் அதிபரைச் சந்திக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. ஏனெனில் ஆளுபவர்களையும் அரசையும் மக்களே தெரிவு செய்கின்றனர். ●


## நம்பிக்கை

எதை இழந்தீர்கள் என்பது முக்கியமல்ல,
என்ன மிச்சம் இருக்கிறது
என்பதே முக்கியம்!

## சங்கீதா அச்சகம்

39, Bd. de la Chapelle
75010 Paris
M°: La Chapelle
Gare du Nord

sangeethafrance@gmail.com
Tél. / Fax :
01.44.72.08.94





## பிரான்சின் முதற் தொலைக்காட்சி 40வது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது!

பிரான்சில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சி TF1 தனது 40 வருடக் கொண்டாட்டங்களில் திளைக்கின்றது. 1975ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட TF 1 (Television Française 1) இன்று பிரான்சில் அதிக மக்களால் தொடரப்படுகிறது. அது மட்டுமல்லாது ஐரோப்பிய அளவிலும் அதிகளவு பார்வையாளர்களைக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதிக பார்வையாளர் சாதனைகளை உதைபந்தாட்டப் போட்டிகளின் போதே TF 1 ஏற்படுத்தி வருகிறது.

...1 ம் பக்கத் தொடர்ச்சி.

## பிரான்ஸ் மாவட்டத் தேர்தல்

கூட்டணி வெற்றிகளைச் சாதகமாக்கும் வாய்ப்புகள் அதிகமுள்ளதாகவே கருத்துக்கணிப்புகள் கட்டியம் கூறுகின்றன.

வழமையைப் போல் இம்முறையும் 60 சதவீத மக்கள் வாக்களிக்கச் செல்லாமல் தங்கள் விடுமுறை நாளை சோம்பலாகக் களிக்கவுள்ளனர். இந்நிலையும் தேசிய முன்னணிக்கட்சிக்கு சாதகமாகவே அமையவுள்ளது. ஏனெனில் பிரான்சின் சகல தேர்தல்களிலும் தேசிய முன்னணி வாக்காளர்களே கடமையுணர்வுடன் பெரும்பான்மையாக இதுவரை வாக்களித்து வந்துள்ளனர் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பாகவுள்ளது.



# காற்று மண்டல மாசடைவு

# பாரிசில் கனரக டீசல் வாகனங்களுக்குத் தடை!

பிரான்சில் தொடர்ந்து வரும் சூழல் மாசடைதலைக் கட்டுக்குள் கொண்டு வரவும், பூமிப்பந்தில் மனிதன் சுவாசிக்கும் காற்றில் அதிகரித்து வரும் நச்சுத்தன்மையைக் குறைக்கவும் பிரான்ஸ் அரசு பெருந்திட்டங்களைத் தீட்டி வருகின்றது.

இன்றைய சீனத் தலைநகரின் நிலைகண்டு உலகம் மிரண்டுபோயிருக்கிறது. குறிப்பாக அதிக தொழிற்சாலைக்கழிவுகள் வெளியேறும் உலகின் பல நாடுகள் சூழல் மாசடைதல் தொடர்பாக பல துரித முடிவுகள் எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. சூழல் மாசடைவு தொடர்பான ஒன்றுகூடல்கள் உலகளாவியரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பிரான்சில் குறிப்பாக பாரிஸ் நகரில் கடந்த ஆண்டுகளில் அறியப்பட்ட உயர் வளிமண்டல மாசு நிலைமைகளைத் தொடர்ந்து பாரிஸ் மேயர் இந்நிலையைக் கட்டுக்குள் கொண்டு வர புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்.

- 2015 யூலை முதல் பாரிஸ் நகருக்குள் டீசலில் இயங்கும் லொறிகள் மற்றும் சொகுசு பஸ் வண்டிகளின் (Autocar) போக்குவரத்து முற்றாகத்தடை செய்யப்படுகின்றது. இத்தடையுத்தரவு 2001க்கு முன்னரான டீசல் வாகனங்களுக்கே பொருந்தும். தற்போது இத்தகைய அதீத சூழல் மாசடைவை ஏற்படுத்தக் கூடிய 17 சதவீத வாகனங்கள் பாவனையிலுள்ளன.

- 2016 யூலை மாதம் முதல் அதீத மாசடைவை ஏற்படுத்தும் என்ற வகைக்குள் அடங்கக்கூடிய அனைத்து விதமான வாகனங்களுக்கும் போக்குவரத்துத்தடை வரவுள்ளது. இத்தடையுத்தரவு 1997ம் ஆண்டுக்கு முன்னரான வாகனங்களுக்குப் பொருந்தும்.

- பாரிஸ் மையப்பகுதி வாகனப் போக்குவரத்தை இயலுமானவரை தவிர்த்து பாதசாரிகளுக்கான பகுதிகளாக மாற்றம் பெறவுள்ளன.

- இத்திட்டங்கள் எல்லாம் நீட்சி பெற்று 2020 முதல் சகல டீசல் வாகனங்களுக்குமான தடையாக அமுல் படுத்தப்படும் என பாரிஸ் மேயர் Anne Hidalgo தெரிவித்துள்ளார். தடையுத்தரவுகளால் பாதிப்புக்குள்ளாவோருக்கான நிவர்த்தித்திட்டங்களும் பாரிஸ் மாநகரப் போக்குவரத்துத்துறை ஆணையாளர் Christophe Najdovski யினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- புதிய சூழல் மாசடைவைக் குறைக்கக்கூடிய புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வோருக்கு உதவித்தொகை

- புதிதாக வாகன ஓட்டுனர் பத்திரம் பெற்ற 25 வயதுக்குக் குறைந்தோருக்கு Autolib இலவசச்சந்தா

- பாரிசில் வசிப்போர் வாகன உபயோகத்தைக் கைவிடும் பட்சத்தில் ஒரு வருடத்துக்கான Navigo சந்தா இலவசம்


- மின்சாரக்கார்களைச் சார்ஜ் செய்வதற்கான மின்மையங்களை நிறுவுவதற்கான உதவிகள் எனத் திட்டங்களை அறிவித்துள்ளார். தற்போது இதற்காக மட்டும் 5 மில்லியன் யூரோக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மாநகரசபை தெரிவித்துள்ளது.

பாரிஸ் நகருக்கு இது மிகவும் தாமதமான முன்னெடுப்புதான். என்றாலும் Anne Hidalgo வின் இத் திட்டங்களை வரவேற்பதாக பசுமைக்கட்சியினர் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர். மேலும் கடந்த வருடங்களில் மருத்துவர்களிடம் அதிகம் சென்றவர்கள் (Bronchiolite) சுவாச நோய் தாக்கத்துக்கு உள்ளானவர்களே என புள்ளிவிபரங்களுடன் விபரித்த பசுமைக்கட்சியினர் தற்போது நமக்கு வேறு வழிகள் இல்லை வளிமண்டல மாசுக்கு எதிராக ஒன்றாக செயற்பட வேண்டியது கட்டாயம் எனவும் தெரிவித்துள்ளனர். வளிமண்டல மாசுக்கெதிராக போராட வேண்டியது கட்டாயம் என தெரிவித்துள்ள 84 சதவீத மக்களின் ஆதரவுடன் இத்திட்டங்களை விவாதத்துக்குள்ளாக்கி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**தீதும் நன்றும் பிறர்தர வாரா**



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# Impôts பதிவுகள்

## இணைய வழியாக மட்டுமே!

அலுவலக சேவைகளை எளிமைப்படுத்துதல் என்ற நடைமுறை மெதுமெதுவாக பிரான்சில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. பல அலுவலக சேவைகளுக்கான படிவங்கள் இணையவழியாக நிரப்பவேண்டியதும், RDV (Rendez vous) கள் இணையவழியாக பெறவேண்டியிருப்பதும் இந்த எளிமைப்படுத்தல் முறைக்குள்ளேயே அடங்குகின்றன.

இதுவரை Impôts இணையவழிப்பதிவுகள் விரும்பியவர்கள் மட்டுமே செய்வதற்கு வழிதிறந்து விடப்பட்டிருந்தது. வருங்காலத்தில் இணையவழிப்பதிவு கட்டாயமாக்கப்படவுள்ளது. பிரான்சில் வரி செலுத்தும் 36 மில்லியன் குடும்பங்களில் 14.7 மில்லியன் மக்களே இணையவழிப்பதிவு முறையைப் பின்பற்றுகின்றனர். இதில் இணைய வழியாகப் பணம் செலுத்துவோர் தொகை இன்னமும் குறைவானது. இத்திட்டத்தால் வருடத்திற்கு 600 மில்லியன் யூரோக்களை சேமிக்க முடியுமென தெரிவித்த வரி இலாகா இதில் 250 மில்லியன் யூரோக்கள் தபால் செலவுக்காக மட்டும் செலவிடப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இணையவழி அலுவலகச் செயற்பாடுகளில் பிரான்ஸ் பின் தங்கியேயுள்ளது. Impôts பதிவுகள் கட்டாயமாக்கப்படும் பட்சத்தில் இணைய வசதியற்றவர்கள், கணனி வசதியற்றவர்கள் குறிப்பாக இணைய அல்லது கணனி பரீட்சயமற்றவர்கள் மற்றும் முதியவர்கள் என அரசு தீர்வு காண வேண்டிய பல புள்ளிகளையும் மக்கள் நலன்சார் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.



## 2015ம் ஆண்டின் பத்திரிகையாளர்

பத்திரிகையாளர்களுக்கான இக்கௌரவம் 1984ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் Mumm எனவும் பின்னர் Louis Hachette எனவும் அழைக்கப்பட்ட இவ்விருது தற்போது Jean-Luc Legardère ன் பத்திரிகையாளர் விருது என அழைக்கப்படுகிறது. பிரான்சின் தலைசிறந்த பதினைந்து ஆண், பெண் பத்திரிகையாளர்களை நடுவர்களாகக் கொண்ட தெரிவுக்குழு இந்த வருடம் ஏகமனதாக Charlie Hebdo பத்திரிகையாளர் குழுவுக்கு இவ்விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. 1989ல் இவ்விருதை வென்றவரும், 2014 வரை நடுவர் குழுவில் இடம்பிடித்து வந்தவரும் இன்று Charlie Hebdo தாக்குதலில்



உயிரிழந்துவிட்டவருமான எமது பத்திரிகைத்தோழன் Georges Wolinski ன் இழப்பு பத்திரிகைத்துறையினருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என TF1 தொலைக்காட்சியின் முன்னாள் செய்தி வாசிப்பாளரும் ஊடகவியலாளருமான Patrick Poivre d'Arvor தெரிவித்துள்ளார்.

Lagardère

**மற்றவர்களை தீயவர்கள் என்று சொல்லுவதால் நாம் நல்லவர்களாகி விடமுடியாது!**




## ஒஸ்கார் விருது சின்னத்தைக் காணவில்லை!.

உலக சினிமாவின் முதலாவது ஒஸ்கார் விருது இது. இவ்விருது சார்லிசப்லினிற்கு 1929ம் ஆண்டு வழங்கப்பட்டது. சார்லி சப்லினிற்கு கிடைத்த முதலாவது விருதும் இதுவேயாகும். இவ்விருதின் பெறுமதி ஒரு மில்லியன் யூரோவிற்கும் அதிகமாகும். பாரிசிலுள்ள ஓர் நிறுவன வளாகத்தில் பாதுகாக்கப்பட்ட 24 கரட் தங்கத்தினால் முலாமிடப்பட்ட இவ்விருது



அண்மையில் களவாடப்பட்டுள்ளது. அத்துடன் சார்லிசப்லினினால் உபயோகப்படுத்தப்பட்ட பெறுமதிமிக்க பல டிசைன் பேனாக்களும் திருடப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பும் பல ஆயிரம் யூரோக்களென அறியப்படுகிறது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

எங்கள் 15 வருட கால அனுபவம் உங்களுக்கான நிறைந்த சேவையை வழங்குகிறது!

# Autre Vue

## OPTICIEN

*Donnez un sens à votre Regard*

Jusqu'à **40%** Sur les Montures optiques*
**25%** Sur les Solaires*

*voir conditions au magasin

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.

**உங்களது தேவை ! எங்களது சேவை !**





Autre Vue
23 rue lamartine - 75009 Paris
Tél / Fax: 01 53 20 04 10
09 67 33 12 83
email: autrevueparis09@gmail.com






# பொதுப்போக்குவரத்துக்கு காத்திருப்பது எரிச்சலூட்டுகிறது!

**இன்றைய அவசர உலகில்** பொதுப் போக்குவரத்திற்காக காத்திருப்பது எரிச்சலூட்டுவதாக பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். உலகின் முக்கிய இருபது பெருநகரங்களில் இவ்விடயம் தொடர்பாக எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில் பாரிஸ் நான்காவது இடத்திலுள்ளது. நாளொன்றிற்கு சராசரியாக 22 நிமிடங்களை வீணாக்குவதாக பாரிஸ் நகர பொதுப் போக்குவரத்து பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். 13 ஆயிரம் பயணிகள் பாரிஸில் கருத்துக்கணிப்புக்கு உட்படுத்தப் பட்டனர்.

கருத்துக்கணிப்பில் பிற நகரங்களின் நிலை

| நகரம் | காத்திருப்பு (சராசரி) |
|---|---|
| 1. பார்சலோன் (ஸ்பெயின்) | 18 நிமிடம் |
| 2. மிலான் (இத்தாலி) | 19 நிமிடம் |
| 3. மட்றிட் (ஸ்பெயின்) | 21 நிமிடம் |
| 4. பாரிஸ் (பிரான்ஸ்) | 22 நிமிடம் |
| ………. | |
| 13. லண்டன் (இங்கிலாந்து) | 35 நிமிடம் |
| 15. ரொறன்ரோ (கனடா) | 36 நிமிடம் |
| 17. நியூயோர்க் (அமெரிக்கா) | 38 நிமிடம் |
| 20. லோஸ்ஏஞ்சல்ஸ் (அமெ.) | 41 நிமிடம் |

**பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன்**
**தன் குறையைக் காண்பவன் முழுமனிதன்**

**சங்கீதா அச்சகம்**
**01.44.72.08.94**




# சாரதி அனுமதிப்பத்திரம் இறுக்கமடையும் நடைமுறைகள்!

பிரான்சில் கடந்த வருடம் வீதிப் போக்குவரத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 3388. பன்னிரெண்டு வருடகாலமாக தொடர்ச்சியாக குறைவடைந்து வந்த இத்தொகை 2014ல் மீண்டும் உயர்வடைந்துள்ளது. (2013ஐ விட 137 இறப்புக்கள் அதிகரித்துள்ளன). அதிகவேகம், மது போதையில் வாகனம் செலுத்துதல், வாகனம் ஓட்டும் போது தொலைபேசி பாவித்தல் போன்ற காரணிகளே இவ்வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணிகளாக பதிவாகியுள்ளன. இதனால் தற்போது மிக இறுக்கமான சட்ட நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று முதல் மூன்று வருடங்களுக்கு இரத்தத்தில் Alcool இன் அளவு 0.2g/l ற்கு மேல் இருக்கமுடியாது. (முன்பு இது 0.5g/l ஆக இருந்தது)
- தொலைபேசி பாவித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது (kits mains libres ou oreillettes)
- மேலும் பாதசாரிக் கடவைக்கு முன் 5m ற்கு முன்பாகவும், நடைபாதையிலும், துவிச்சக்கர வண்டிப் பாதையிலும் வாகனம் தரிக்கப்படுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

இச்சட்டம் உடனடியாக அமுலுக்கு வருகிறது.

## சரிவை ஈடுசெய்ய புதிய நிர்வாக இயக்குனர்

உலகில் 36 000 உணவகங்களை கொண்டிருக்கும் மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனமாகிய மக்டொனால்ட் தனது நிர்வாக இயக்குனரை மாற்றவுள்ளது. அண்மைக் காலங்களில் மந்தமாகி வரும் விற்பனை வீதத்தினை அதிகரித்து, சுறுசுறுப்பாக்கும் நோக்கில் புதிய நிர்வாக இயக்குனரை தெரிவு செய்திருக்கிறது.

வரும் மார்ச் 1ம் திகதியிலிருந்து புதிய நிர்வாக இயக்குனராக Steve Easterbrook ( 48 ans) பொறுப்பேற்கவுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக விற்பனை வீதம் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவில் இதன் விற்பனை வீதம் மிக குறைந்ததற்கு காரணம், மக்களிடையே மக்டொனால்ட் பற்றி ஏற்பட்ட எதிர் மறையான விமர்சனங்களாகும் , மக்டொனால்ட் டின் தரம் குறையாத போதும் மக்களிடையே அதன் சுவை குறித்து எதிர்மறையான விம்பம் ஏற்பட்டிருந்தது இதை சரியாக கணித்து செயற்படாத காரணத்தால் தொடர்ந்து விற்பனை குறைந்தது மட்டுமல்லாமல் கடந்த மாதங்களில் ஏற்பட்ட சில கவனக்குறைவுகளும் பின்னடைவிற்கு காரணங்களாக அமைந்துவிட்டன.

# RER சாரதியை தாக்கியவருக்கு 9 மாத சிறை


**கடந்த** ஜனவரிமாதம் **RER** சாரதி ஒருவர் தாக்கப்பட்டதை தொடர்ந்து RER A சாரதிகள் அடுத்தநாள் 24 மணிநேர வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். 29 ஜனவரி முழுநாளும் RER A ஓடாததால் 12 இலட்சம் பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

பயணி ஒருவரின் கை கதவிற்குள் சிக்கியதால் அபாயஒலி எழுப்பப்பட்டது. இதை சரி செய்வதற்கு சாரதி சென்றபோது சம்பந்தப்பட்ட பயணி தனது தலையால் சாரதியைத் தாக்கியுள்ளார். சாரதியின் மூக்கு உடைந்து சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். தாக்கியவர் உடனடியாகவே பயணிகள் மேடையில் இருந்து தப்பி ஓடிவிட்டார்.

பொலிசாரின் தொடர் தேடலைத் தொடர்ந்து சாரதியைத் தாக்கியவர் கைது செய்யப்பட்டார். 42 வயது நிரம்பிய குற்றவாளிக்கு 18 மாத தண்டனை வழங்கப்பட்டது. இதில் 9 மாதம் சிறைத்தண்டனையும் மீதி 9 மாதம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் ஆகும். தாக்கியவர் மதுவிற்கு அடிமையானவர் என்றும் மனதளவில் பாதிப்பிற்குள்ளானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 12 பெப்ரவரி அன்று பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவருக்கு எதிரான தீர்ப்பு 16 பெப்ரவரியில் வழங்கப்பட்டது.

இது போன்ற வழக்குகள் சில நாடுகளில் ஆண்டுக்கணக்கில் இடம்பெறும் போது ஒருசில வாரங்களுக்குள் சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டு தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களைத் தண்டிப்பதற்கு தற்போது கண்காணிப்புக் கமராக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

# சர்வதேசக்கண்காட்சி 2025 ல் பிரான்சில்!







**உலகநாடுகளின்** தொழிற்துறைச் சாதனைகளை பறைசாற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சர்வதேசக் கண்காட்சி இன்று மனித குலத்தின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகளை முன்னிலைப்படுத்தி மக்களுக்கான கற்பிதமாக விரிந்து செல்கிறது.

உலக நாடுகள் அனைத்தும் பங்கேற்ற முதலாவது சர்வதேசக் கண்காட்சி 1851ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்றது. தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு நாடுகளிலும் இது இடம்பெற்று வருகிறது.

2025 ஆம் ஆண்டு கண்காட்சிக்கான விண்ணப்பத்தை பிரான்ஸ் சார்பாக அதிபர் முன்மொழிந்துள்ளார். இதற்கு முன்னர் பிரான்சில் 1900ம் ஆண்டு இக்கண்காட்சி நடாத்தப்பட்டது. பின்னர் இதற்கான வாய்ப்புகள் கிட்டவில்லை. 2025 லும் பிரான்சிற்கான வாய்ப்புகள் கிடைக்குமா எனத் தெரியாத நிலையிலும் இந்த வாய்ப்பை பிரான்ஸ் பெற்றுக்கொள்வதற்காக தான் அயராது உழைப்பேன் என அதிபர் தெரிவித்துள்ளார். அதிகாரபூர்வமான விண்ணப்பம் 2016ல் அனுப்பப்படும். முடிவுகள் 2018ல் அறிவிக்கப்படும்.

7500 உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு இக்கண்காட்சிக்கான ஆரம்பப் பணிகளை கவனித்து வருகின்றது.

கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் Jean-Christophe Fromantin இக் கண்காட்சியின் முக்கிய அம்சம் கண்காட்சி நடைபெறும் குறிப்பிட்ட ஆறு மாத காலத்தில் 70 மில்லியன் வருகையாளர்களை தக்க வைப்பதே. இத்தகைய ஒரு பாரிய நிகழ்வை பிரான்ஸ் ஒழுங்கமைப்பதால் பிரான்சின் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட அளவு மேம்பாடுகள் ஏற்படும் எனவும் உலக அரங்கில் பிரான்சின் செயற்றிறனும் மதிப்பும் உயரும் எனவும் தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கு பிரான்சில் 84 சதவீத மக்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இக்கண்காட்சி இவ்வருடம் மிலான் (இத்தாலி) நகரிலும் 2017ல் Kazakhstan லும், 2020ல் துபாயிலும் இடம்பெறவுள்ளது.



## ஐரோப்பிய நொத்தார்களின் புதிய தலைவர்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜோன் தறாட் (Jean Tarrade) என்பவர் ஐரோப்பிய நாடுகளின் 40000 நொத்தார்களின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 21 தை அன்று தலைவராகப் பதவி ஏற்ற இவர் ஓராண்டு காலம் பதவி வகிப்பார்.

28 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுள் இந்த ஒன்றிணைந்த அமைப்பில் 22 நாடுகளின் நொத்தார் அமைப்புகள் இணைந்து இயங்குகின்றன. இந்த அமைப்பு ஐரோப்பிய ஒன்றிய நொத்தார் ஆலோசனைக்குழு (CNUE - Le Conseil des Notariats de l'union Européenne) என அழைக்கப்படுகின்றது.

இவர்கள் இணைந்து இயங்குவதனால் 22 ஐரோப்பிய நாடுகளில் கட்டிடங்கள், வீடுகள், அலுவலகங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் விற்பனை உறுதிகளைக் கையாள முடியும்.

பிரான்சில் மாத்திரம் 2013ம் ஆண்டில் அண்ணளவாக 723000 சொத்து விற்பனைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பாரிஸ் மாகாணத்தில் 133800 விற்பனைகளும் ஏனைய மாகாணங்களில் 589200 கைமாற்றங்களும் நொத்தார்களினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தற்போதைய புதிய தலைவரான ஜோன் தறாட் 2020ம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் நிறுவனங்கள் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் இடமாற்றத்திற்கும் தேவையான நடவடிக்கைகள் ஏற்படுத்தப்படும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கிறார்.




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

Gold • Diamond • Platinum

Since 1987

# மோகன் ஜூவலரி மார்ட்

# அட்ஷய திருவிழா

**20.04.2015**
**திங்கட்கிழமை**

**21.04.2015**
**செவ்வாய்க்கிழமை**

இலவசம்

இலவசம்



வாடிக்கையாளர்கள்அனைவருக்கும்
தங்க நாணயம்அல்லது பென்ரன்

## இலவசம்


201, Rue du Fg. St. Denis - 75010 Paris (M°: La Chapelle / Gare du Nord)

Tél.: 01 42 05 65 26 - Fax : 09 50 31 01 82

: mohanjm@hotmail.fr : mohanjewellerymart



# 2008 ற்கு முற்பட்ட தொலைக்காட்சிப்பெட்டிகள்!
## மாற்றவேண்டிய காலம் நெருங்கிவிட்டது!

**உங்களுடையது** மட்டுமல்ல பிரான்சில் சேவையிலுள்ள 40 மில்லியன் தொலைக்காட்சிப் பெட்டிகளில் 10 மில்லியன் தொலைக்காட்சிப்பெட்டிகளின் நிலை இதுதான். காலக்கெடு 2016 இளவேனில் வரை.

தொழில்நுட்பம் வளர வளர மாற்றங்களும் இன்றியமையாதவையாகி விட்டன. ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சிகள் வசதிகள் நமது வீடுகளுக்குள் நுழையும் போதுதான் கைகளும் கடிக்கின்றன. வாங்கவும் முடியாமல் விடவும் முடியாமல் நடுத்தரக்குடும்பங்கள் தத்தளிக்கும் நிலை.

2011ல் தொலைக்காட்சி அலை வரிசை மாற்றமான TNT (டிஜிட்டல் அலைவரிசை முறை) அறிமுகப்படுத்தப்பட பழைய தொலைக்காட்சிகள் பல வேறு வழிகளின்றி மாற்றம் கண்டன. இன்று சாதாரண டிஜிட்டல் வரையறை ஒளிபரப்பு முன்னகர்ந்து FULL HD உயர் வரையறை ஒளிபரப்பாக மாறவுள்ளது. இந்த FULL HD வசதிகளற்ற MPEG - 4 தொழில்நுட்பத்துக்கு ஈடுகொடுக்காத தொலைக்காட்சிப்பெட்டிகளில் 2016 ஏப்ரல், மே மாதங்களுக்கு பின்னர் கறுப்புத் திரையை மட்டுமே பார்க்க முடியும்.

TNT மாற்றத்தின் போது உதவியது போல் இம்முறையும் அரசு வசதி குறைந்த குடும்பங்களுக்கு உதவுவதற்கான திட்டங்களையும் வகுத்து வருகிறது.


இங்கும் முக்கியமாக தொலைக்காட்சிச்சேவையை ADSL BOX கள் (உதாரணம் Free box, BBOX...போன்றவை) மூலம் பெறாமல் நேரடியாக TNT மூலம் பெறுவோரே கட்டாய தொலைக்காட்சிப்பெட்டி மாற்றத்துக்கு தள்ளப்படுவர்.

---

## குற்றவாளிகளிடமிருந்து பறிமுதலாகும் சொத்துக்கள் தொகை அதிகரிப்பு!

AGRASC
Agence de gestion et de recouvrement des avoirs saisis et confisqués

**பிரான்ஸ் நீதித்துறை** குற்றவாளிகளிடமிருந்து பறிமுதல் செய்த சொத்துக்களின் மதிப்பு கட்டுக் கடங்காமல் உயர்ந்து வருவதாக AGRASC அமைப்பு தெரிவித்துள்ளது. குற்றவாளிகள் தகாத முறையில் சேர்த்த சொத்துக்களின் மேல் கை வைப்பதற்கு நீதிபதியும் எந்தவித பாரபட்சமும் காட்டுவதில்லை. 419 கட்டிடங்கள், 1749 வங்கிக்கணக்குகள், 597 வாகனங்கள், 6 கப்பல்கள், 619 இலத்திரனியற் சாதனங்கள் மற்றும் நகைகள், மணிக்கூடுகள் என பட்டியல் நீளமானது.
கடந்த வருடத்தில் மட்டும் 773 மில்லியன் யூரோ பெறுமதியான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கணக்குப் பார்த்தால் நாளுக்கு 300 ஆயிரம் யூரோக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல்களை பறிமுதல் சொத்துக்களை நிர்வாகம் செய்யும் அமைப்பான AGRASC (Agence de Gestion et de Recouvrements des Avoirs Saisis et Confisqués) நீதித்துறை அமைச்சர் Christiane Taubira இடம் ஒப்படைத்துள்ளது. பெரும்பாலான சொத்துப்பறிமுதல்கள் போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளிடமே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீளவும் ஒருவர் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டால் பறிமுதல் சொத்துக்கள் மீள அவர்களிடமே ஒப்படைக்கவும் படுகின்றன. 21 மில்லியன் பெறுமதியான சொத்து மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.



- **மனதின் கட்டுப்பாடு** உடலையும், அதில் எழும் **நல்ல எண்ணங்கள்** உள்ளத்தையும் பலப்படுத்துகிறது.
- **நேர்மையான நடத்தை** உங்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் சமாதானத்தை வழங்கும்.

- புத்தர் -

---

வாழ்க்கையில்
**பொருட்களைவிடவும் நல்ல மனிதர்களை சம்பாதியுங்கள்!**

---

## திருமண வாழ்த்து



14.02.2015

**புதிய வாழ்வில் அடி எடுத்துவைக்கும்**
**புதுமணத் தம்பதியர்**
**சித்திராங்கன் – அனுசிகா**
**அவர்கள்**
வாழ்வின் சகல சௌபாக்கியங்களும் பெற்று
சீரும் சிறப்புடனும் வாழ
மண்கும்பாண் வெள்ளைப் புற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் அருள்வேண்டி
வாழ்த்தி நிற்கும்
திருமதி. இந்திராவதி கனகரத்தினம் (பெரியம்மா - கொழும்பு)
திரு. உமாபதிசிவம் குடும்பத்தினர் (பெரியப்பா - பிரான்ஸ்)
திரு. திருமதி. ராசு குடும்பத்தினர் (பெரியப்பா, பெரியம்மா - பிரான்ஸ்)
திரு.திருமதி. வேலும் மயிலும் குடும்பத்தினர் (மாமா,மாமி - பிரான்ஸ்)
www.allaiyoor.com

# பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

● **புலம்பெயர் தமிழர் திருநாள்**

9வது புலம்பெயர் தமிழர் திருநாள் நிகழ்வுகள் 24.01.2015 / 25.01.2015ல் சென்தெனியில் நடைபெற்றது.

● **பட்டமளிப்புவிழா**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவும், பேராசிரியர். சச்சிதானந்தம் அவர்களின் "தெரியத் தெரிய தெரியாமை தெரியும்" நூல் வெளியீடும் 7.2.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.

● **சலங்கை**

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பரத விழா சலங்கை 22.02.2015 அன்று Blanc Mesnilல் நடைபெற்றது.

● **பனிவெளியாடல்**

TYO அமைப்பின் பனிவெளியாடல் நிகழ்வு 22.02.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.

● **வன்னிமயில்**

தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் வன்னிமயில் நடனநிகழ்வு 22.02.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.

● **வேலணை ப.மா.சங்கம்**

வேலணை பழையமாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு 22.02.2015 அன்று ஒபே வில்லியேயில் நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பிரான்ஸ் ப.மா.சங்கத்தின்

**தாமோதரகானம்**


**29. 03.2015**



தோழர் கலைச்செல்வனின் 10 வது ஆண்டு

**நினைவு ஒன்றுகூடல்**

**28. 03.2015**



ஈழவிடுதலைப்போராட்ட ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும், இலக்கியவாதியுமான

**கி. பி. அரவிந்தன்**


**அவர்களுக்கு**

**எங்கள்**

**அஞ்சலிகள்!**

**இலக்கிய நண்பர்கள் -பிரான்ஸ்**

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 16



**மேலிருந்து கீழ்**

1. பங்குப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் இடம் (7)
2. இலக்கியவடிவங்களில் ஒன்று (3)
3. குழந்தைகளை தூங்க வைக்கும் இனிய கீதம் (4)
4. ஜனநாயக விரோத ஆட்சிமுறையை இவ்வாறு அழைப்பர் (7)
6. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று தலைகீழாக உள்ளது (3)
8. நரியின் சிறப்பியல்பு. (தலைகீழாக) (5)
9. மழை வருவதற்கு அறிகுறியாக வானில் தோன்றும். (4) (தலைகீழாக)
10. ஆதாரமற்ற பேச்சு, குறிப்பாக நடிகைகளுக் கெதிராக பரப்பப்படுவது (4) (தலைகீழாக)
11. நிலத்தின் கீழ் தோண்டப்படும் பாதை (5) (தலைகீழாக குழம்பியுள்ளது)
12. 'ஆர்ய' என்னும் அடிச் சொல்லிலிருந்து மருவிவந்த இச்சொல் மக்கள்கூட்டத்தைக் குறிக்கிறது. (தலைகீழாக) (4)
13. இறந்த உடலங்கள் தகனம் செய்யப்படும் இடம் (4) (தலைகீழாக)

**இடமிருந்து வலம்**

1. பரதத்தில் தோன்றிய நடனம் இது. (8)
3. இளம் பெண்கள் அணியும் மேலாடை (3)
5. மன்னர்கள் இதில் பவனி வருவர் (மாறியுள்ளது)
7. காடு (3) (மாறியுள்ளது)
11. தன்னைப்பற்றி தானே எழுதுவது (மாறியுள்ளது) (5)
12. மாதங்களில் ஒன்று (3)

✔ உங்கள் பதில்களை 10 வைகாசி 2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.15ல் பரிசு பெறுபவர்கள்.

1. சத்தியமூர்த்தி (Paris 12)
2. தனராஜரத்தினம் (Paris 18)
3. நல்லநாயகம் (Paris 18)

**சரியான விடை எழுதியோர் :**

● சுபா குருபரன் (Torcy)

**பரிசில்களை சங்கீதா அச்சகத்தில் நேரில் வந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!**

குறுக்கெழுத்துப்போட்டி முழு விபரங்களையும் www.nilafrance.com இல் பார்க்க முடியும்.

● **அனுப்ப வேண்டிய முகவரி** ●


**NILA,** 39, Bd. de la Chapelle - 75010 PARIS

கனடாவினை தலைமையகமாகக் கொண்டு– இயங்கும் பெண்கள் 20 (girls 20) என்ற அமைப்பின் பிரான்ஸ் உறுப்பினராக இலங்கையைச் சேர்ந்த செல்வி ஸ்ரனிலாஸ் அனுசிகா அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(அல்லையூர் இணையம்)



## கலாவினோதன் சின்னமணி



1935 - 2015

தனது கலாவினோதத்தால் வில்லிசைக்குப் பெருமைசேர்த்த கலைஞர் மதிப்புமிகு சின்னமணி நா. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு

**எங்கள் இதய அஞ்சலி!**

- சின்னமணி ரசிகர்கள், பாரிஸ் -

## பிரான்ஸ் மக்களின் மன அழுத்தத்திற்கு முக்கிய காரணிகள்..








**மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய இணைய முகவரி**

www.thiruvenkadumandaitivu.com









# பிரான்சில் மீண்டும் தேசத்துரோக தண்டனை!

**பிரான்சில்** ஜனவரியில் இடம்பெற்ற தாக்குதல்களுக்குப் பின்னர் தீவிர வாதத்திற்கு எதிரான பல சட்டமூலங்கள் கூர்மைப்படுத்தப் பட்டுள்ளன. தலைநகர் மற்றும் பெருநகரங்களில் அதிகளவு மக்கள் நடமாடும் பகுதிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு இராணுவக் கண்காணிப்பு என பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தீவிர வாதச் செயற்பாட்டாளர்கள் என இனங்காணப்பட்ட பலர் பிரான்சிலும் வேறு நாடுகளிலும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் தீவிரவாதத்திற்கு எதிரான முன்னெடுப்புகளில் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் வழிநடத்தலும், பிரதமர் மனுவல் வால்சின் தீவிரமும் பிரான்ஸ் மக்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது. ஆட்சிக்கு வந்ததிலிருந்து தொடர்ந்து இறங்கு முகத்தையே சந்தித்து வந்த அதிபரின் பிரபலத்துவம் தற்போது முன்னோக்கி மாற்றங்களை கண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முன்னாள் அதிபர் நிக்கொலா சார்க்கோசியின் கட்சியான UMP தீவிரவாதத்துக்கு எதிரான சரியான தண்டனை முறை என்ற தொனிப்பட புதிய சட்டமூலத்தைப் பரிந்துரை செய்துள்ளது. பிரான்சில் தீவிரவாதத்திற்குத் துணைபோவோருக்கு அல்லது செயற்படுவோருக்கு தேசத்துரோக தண்டனையை மீண்டும் அமுல் செய்யக் கோரியுள்ளனர். இத்தண்டனை முறை மூலம் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் ஒரு பிரான்ஸ் பிரஜை தனது தேசிய குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை இழக்கநேரிடும். அரச அலுவலகங்கள் முதல் வேலைவாய்ப்பு வரை அனைத்து இடங்களிலும் பாரபட்சத்துக்கு உட்படுத்தப்படுவார். இத்தண்டனை முறை தொடர்பான கருத்துக்கணிப்பில் 76 சதவீத பிரான்ஸ் மக்கள் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் வரலாற்றில் ஏற்கனவே இரண்டு முறை தேசத்துரோகி தண்டனை முறை அமுல் படுத்தப்பட்டிருந்தது. முதலாவது "பிரெஞ்சுப்புரட்சி" காலகட்டத்திலும், இரண்டாவது 1944ல் இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் நாசிப்படைகளுடன் தொடர்புடையவர்களுக்கு ஜெனரல் De Gaulle னாலும் அமுல்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் 1951ல் சர்வதேச மன்னிப்புச்சபையின் (Amnistie) வேண்டுகோளுக்கமைய கைவிடப்பட்ட இச்சட்டமூலம் இப்போது மீண்டும் UMP கட்சியினால் தூசுதட்டப்பட்டிருக்கிறது. சோசலிசக்கட்சியின் ஒரு பகுதியினராலும், தேசிய முன்னணியினராலும் (FN) இச்சட்டமூலம் ஆதரிக்கப்பட்டாலும், பிரதமர் மனுவல் வால்சும், நீதித்துறை அமைச்சர் Christiane Taubira வும் தமது சார்பற்ற நிலையைத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். மேலும் நீதித்துறை அமைச்சர் தேசத்துரோகி எனும் அடையாளம் சுமக்கும் அழுத்தம் மிகக் கொடூரமானது எனவும் தான் இந்த அடையாளத்தை ஒரு போதும் பரிந்துரைக்கமாட்டேன் எனவும்தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற விவாதங்களில் அதிக கவனம் பெற்றுவரும் இச்சட்டமூல அமுல்படுத்தல் தொடர்பான விவாதம் அதிக மக்கள் செல்வாக்கைப் பெற்றிருப்பதும் அதிபர் பிரான்சுவா ஹொலந்தும் பிரதமர் மனுவல் வால்சும் மிகவும் சவாலான துரித முடிவுகளை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.




## எறிபந்தாட்டம் (Handball)
## ஐந்தாவது தடவையாகவும் பிரான்ஸ் உலக சம்பியன்

கட்டாரில் நடந்து முடிந்த 24வது உலக எறிபந்தாட்டப் போட்டியில் பிரான்ஸ் சம்பியனாகியுள்ளது. 1938ம் ஆண்டு ஆரம்பித்த எறிபந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் இரண்டாம் உலகப் போரினால் இருமுறை நடைபெறவில்லை. பின்னர் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்றது. 1993ம் ஆண்டிலிருந்து இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது.

கால்பந்தாட்டம் போன்று இது கையினால் விளையாடப்படும். ஓர் அணியில் 7 வீரர்கள் இருப்பார்கள். அதிகம் ரசிகர்களை கொண்டிருக்காத இந்த விளையாட்டில் பிரான்ஸ் தொடர்ந்தும் அசத்திவருகிறது. இதற்கு முன்னர் தலா நான்கு முறைகள் கிண்ணத்தை வென்று சமநிலையிலிருந்தன.

சுவீடன் (1954,1958,1990,1999),
ருமேனியா ( 1961, 1964, 1970,1974)
பிரான்ஸ் (1995, 2001, 2009, 2011)

2015ம் ஆண்டு கிண்ணத்தை வென்றதன் மூலம் பிரான்ஸ் அதிக உலக கிண்ணங்களை வென்று சாதனை படைத்திருக்கிறது.

2017ம் ஆண்டு உலகக்கிண்ணம் பிரான்சில் நடைபெற இருக்கிறது. பிரான்சிற்கு அடுத்த கிண்ணத்துக்கான வாய்ப்பும் பிரகாசமாய் உள்ளது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
**செல்லத்துரை லோகேஸ்வரன்**
(யாழ். வேலணை, ஜேர்மனி)
தோற்றம் : 17. 10. 1955
மறைவு : 11 . 01. 2015



அமரர்
**ஞானாம்பிகை சிவசுப்பிரமணியம்**
(வேலணை, பிரான்ஸ்)
தோற்றம் : 07. 01. 1933
மறைவு : 03. 02. 2015



அமரர்
**ஸ்ரீகரலக்ஷ்மி குலசேகரம்**
(காரைநகர், பிரான்ஸ்)
தோற்றம் : 07. 10. 1946
மறைவு : 07. 03. 2015



அமரர்
**சரவணமுத்து சண்முகநாதன்**
(அச்சுவேலி)
தோற்றம் : 04. 10. 1947
மறைவு : 20. 01. 2015



அமரர்
**கார்த்திகேசு கனகரெத்தினம்**
(புங்குடுதீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 10. 12.1945
மறைவு : 09. 02. 2015



அமரர்
**கந்தையா புஸ்பராஜா**
(அரியாலை, பிரான்ஸ்)
தோற்றம் : 02. 10. 1955
மறைவு : 01. 03. 2015



அமரர்
**கனகசபை உருத்திரகுமாரன்**
(நயினாதீவு)
தோற்றம் : 10. 12. 1955
மறைவு : 22. 01. 2015



அமரர்
**பொன்னுத்துரை சிவபாக்கியம்**
(யாழ்ப்பாணம்)
தோற்றம் : 12. 05. 1930
மறைவு : 11. 02. 2015



அமரர்
**தியாகராஜா துசான்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 10. 11. 1982
மறைவு : 19. 02. 2015



அமரர்
**ஷயந்தன் அக்ஷயன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 13. 11. 2000
மறைவு : 22. 01. 2015



அமரர்
**பிறிசில்லா கிளறிஸ்**
(யாழ்ப்பாணம், பிரான்ஸ்)
தோற்றம் : 04. 12. 1947
மறைவு : 13. 02. 2015



அமரர்
**தில்லையம்பலம் சிவநாதன்**
(கோப்பாய், பிரான்ஸ்)
தோற்றம் : 07. 06. 1944
மறைவு : 18. 02. 2015



அமரர்
**இசபெல்லா றுக்மணி**
(கொழும்பு)
தோற்றம் : 16. 03. 1949
மறைவு : 23. 01. 2015



அமரர்
**சின்னராசா பொன்னம்மா**
(நயினாதீவு - கனடா)
தோற்றம் : 03. 06. 1932
மறைவு : 14. 03. 2015




அமரர்
**செல்லத்தம்பி லோகநாதன்**
(புலோலி, டென்மார்க்)
தோற்றம் : 04. 01.1962
மறைவு : 08. 02. 2015



அமரர்
**பேதுறுப்பிள்ளை யேசுராசா**
(வவுனியா, பிரான்ஸ்)
தோற்றம் : 28. 01. 1958
மறைவு : 30. 01. 2015



அமரர்
**இளையதம்பி லூர்த்தம்மா**
(யாழ்ப்பாணம், பிரான்ஸ்)
தோற்றம் : 19. 05.1930
மறைவு : 12. 03. 2015



அமரர்
**வைத்தியநாதக்குருக்கள் ஜெயவர்த்தினி அம்மா**
தோற்றம் : 21. 08. 1951
மறைவு : 10. 03. 2015




அமரர்
**பொன்னம்பலம் நடராசா**
(யாழ்ப்பாணம், ஆரியகுளம்)
தோற்றம் : 18. 08. 1947
மறைவு : 30 . 01. 2015



அமரர்
**தம்பையா நாகேஸ்வரன்**
(நயினாதீவு)
தோற்றம் : 29. 11. 1944
மறைவு : 20 . 01. 2015



அமரர்
**செல்லையா தங்கவடிவேல்**
(யாழ்ப்பாணம், இந்தியா)
தோற்றம் : 16. 07. 1946
மறைவு : 02. 02. 2015



## உடல்நலத்திற்கு கேடாகும் சிவப்பு விளக்கு நிறுத்தங்கள்!

ஒரு வாகன ஓட்டுனர் சாதாரணமாக ஒரு நாளின் 2 சதவீதத்தை சிவப்பு விளக்கு நிறுத்தங்களில் செலவழிக்கிறார். இங்கு சூழலை அதிக மாசடையச் செய்யக்கூடிய, சுவாச நோய்களை ஏற்படுத்தக்கூடிய நுண்துகள்கள் தேங்கி நிற்கின்றன. நாற்சந்தி விளக்கு நிறுத்தங்களில் இது அதிகமாகிறது. வாகனங்களை வேகமாக நிறுத்துவதால் அல்லது வேகமாக செலுத்துவதால் வெளியேறும் வாகனப்புகையே இந்நுண்துகள்களின் தோற்றத்திற்கான முக்கியகாரணியாகின்றது. இத்தகைய சிகப்பு விளக்கு நிறுத்தங்களில் சாதாரண வாகனப்போக்குவரத்து சாலைகளிலும் பார்க்க 29 மடங்கு உயர்வான வாயு மாசு துகள்கள் பொதிந்து கிடக்கின்றன. இவை எமது ஆயுளை வெகுவாகக் குறைக்க வல்லன என இங்கிலாந்தின் Université de Surrey ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



### வேலைவாய்ப்பில் முன்னேற்றம் நிகழாவிட்டால்

# 2017 ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடமாட்டேன்!

**- அதிபர் பிரான்சுா ஹொலந்**

**ஜனாதிபதியாக** பதவியேற்ற பின்னர் ஐந்தாவது செய்தியாளர் மகாநாட்டை கடந்த பெப்ரவரி 5ல் அதிபர் பிரான்சுா ஹொலந் நடாத்தினார். இருபது நிமிடங்கள் உரையாற்றிய அதிபர் தொடர்ந்து இரண்டுமணிநேரம் பத்திரிகையாளர்களின் சரமாரியான கேள்விகளுக்கு பதில் அளித்தார்..

- அண்மையில் நடந்த தாக்குதற் சம்பவங்கள் எம்மை மிரளச்செய்வதாக இருந்தாலும் பிரான்ஸ் குடியரசு ஒரு போதும் வளைந்து கொடுக்காது. தாக்குதல்களால் எம்மை அடிபணிய வைக்க முடியாது.
- விரும்புகின்ற எல்லா இளைஞர்களையும் "குடியியல் ஒப்பந்தம்" (Contrat civique) ஒன்றின் மூலம் இணைத்து தேவையான நோக்கில் அவர்களின் சேவையைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது ஆனி முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும்.
- கல்வியைத் தொடராது பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் தொகையை இல்லாமல் ஆக்க முன்னுரிமை கொடுக்கப்படும். பாடசாலைகளில் மதச்சார்பின்மை பேண தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.

பேட்டியின் போது மேலும் சில பரிந்துரைகளையும் முன்வைத்தார்.

- உலகில் உள்ள எல்லா முரண்பாடுகளையும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்க்க முடியாது
- கிறீஸ் நாட்டிற்கு மாத்திரமல்லாமல் ஏனைய நாடுகளிற்கும் சிக்கன நடவடிக்கைகள் ஏற்புடையதாகாது
- உக்ரைன் நிலைப்பாட்டில் நாங்கள் சமாதானத்தை நோக்கிப் போக வேண்டியமை அவசியம்.
- பொருளாதாரத்தில் நாங்கள் பொறுப்புடன் செயற்பட்டு மிக நீண்டதூரம் செல்ல வேண்டும்.
- பசுமைக்கட்சியினர் அரசில் இணைய விரும்பினால் வரவேற்கிறோம்.
- எல்லாக் கட்சிகளும் "பிரெஞ்சுக் குடியரசின் பெறுமானத்தை முழுமையாக புரிந்து கொள்ளவேண்டும்.

**பேசாதே! கேள்!!**

**அதிகமாகப் பேசினால், அமைதியை இழப்பாய்..**
**ஆணவமாகப் பேசினால், அன்பை இழப்பாய்..**
**வேகமாகப் பேசினால், அர்த்தத்தை இழப்பாய்..**
**கோபமாகப் பேசினால், குணத்தை இழப்பாய்..**
**வெட்டியாகப் பேசினால், வேலையை இழப்பாய்..**
**வெகுநேரம் பேசினால், பெயரை இழப்பாய்..**



சங்கீதா அச்சகம் 01.44.72.08.94




**பிரான்சில்** கடந்த 20 வருடங்களில் தீ விபத்துக்கள் இரட்டிப்பாக அதிகரித்துள்ளன. சராசரியாக ஒவ்வொரு இரண்டு நிமிடங்களுக்கும் தீ விபத்துக்கள் இடம்பெறுகின்றன. (அண்ணளவாக 2,63000 தீ விபத்துக்கள்)

இவ்வாறான தீவிபத்துக்களில் வருடத்திற்கு 800 பேர்வரையில் உயிரிழக்கின்றனர். 10000 பேர் வரையில் காயமடைகின்றனர்.

இதனைக் குறைக்கும் வகையில் புகையறிகருவி கட்டாயமாக்கப் படுகின்றது. இதற்கான சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படுகிறது. பிரான்சைப் பொறுத்தவரையில் மிகக் குறைந்த அளவிலான வதிவிடங்களுக்கே இது வரையில் புகை யறி கருவி பொருத்தப்பட்டுள்ளது.

8 மார்ச் 2015 ற்கு முன் குறைந்தது ஒரு புகையறி கருவியேனும் வீடுகளில் கட்டாயமாக பொருத்தப்பட்டிருக்க வேண்டும். வீட்டு உரிமை யாளரே அதனைப் பொருத்திக் கொடுக்கவேண்டும் அல்லது அதற்குரிய செலவை பொறுப்பேற்க வேண்டும். மேலும் காலத்திற்குக் காலம் கருவி சரியாக தொழிற்படுகின்றதா என்பதை பரீட்சித்து பார்க்கவேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறது. கருவி பொருத்திய பின் அதற்குரிய அத்தாட்சி வதிவிடக் காப்புறுதி நிறுவனத்திற்கு கையளிக்கவேண்டும். இன்றேல் தீ விபத்தினால் ஏற்படும் சேதங்களுக்கு காப்புறுதி பொறுப்பேற்பதில் சிரமங்கள் ஏற்படும்.




## வாகன ஓட்டுனர் உரிமம் வழங்கும் அதிகாரியாக தபால் ஊழியர்கள்!

மின்னஞ்சலின் வருகையின் பின்னர் அஞ்சல்துறை தனது முக்கியத்துவத்தை இழந்து விட்டது என்றே சொல்லலாம். அரச ஊழியர்களான 240000 தபால் ஊழியர்கள் வேலை இழக்கும் நிலை. இந்நிலையினை தவிர்க்க புதிய செயற்பாட்டு முறைகளை முன் வைத்து செயற்பட அரசு தீவிரபிரயத்தனம் எடுத்து வருகிறது. சரி யான தீர்வினை முன்வைக்கவேண்டியது தமது கடமை என பிரான்சின் புதிய பொருளாதாரத்துறை அமைச்சர் Emmanuel Macron தனது Loi Macron திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

தபால் துறையின் நிலைமை இவ்வாறிருக்க வாகன ஓட்டுனர் உரிமப்பத்திரம் வழங்கும் நிர்வாகத்தின் நிலைமைகள் தலைகீழாகவுள்ளன. போதிய அளவு அதிகாரிகள் இல்லாததால் பரீட்சைகளுக்காக காத்திருப்போரின் தொகை கட்டுக்கடங்காமல் நீண்டு அரசுக்கு பாரிய அழுத்தம் கொடுப்பதாக உள்ளது.

எனவே இரு துறைகளுமே அரச பொதுத்துறைகள் தான் என்பதனால். ஒரு சிறிய அறிவுறுத்தல் பயிற்சிக்குப் பின்னர் தபால் ஊழியர்களால் வாகன ஓட்டுநர் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகச் செயற்பட முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார். அமைச்சரின் இக் கருத்து இரு தரப்பினரையும் கோபத்துக்குள்ளாக்கியுள்ளது.

தபால் ஊழியர்கள் இதற்கு மசிவதாய் இல்லை. இன்று இப்படி அறிவுறுத்துபவர்கள் நாளை பாண் விற்கச் சொல்வார்கள். பின்னர் மருந்து விற்கச் சொல்வார்கள். எங்கள் பணிகளைத்தக்க வைக்க என்று காரணம் சொல்லி எமக்கு ஒவ்வாத திடீர் மாற்றங்களைக் கொண்டு வருவதை எம்மால் அனுமதிக்கமுடியாது என கடும் கண்டனங்களை அவர்கள் பதிவுசெய்துள்ளனர்.


இதே நேரம் வாகன ஓட்டுனர் உரிமம் வழங்கும் அதிகாரிகளும் எதிர்ப்புகளைப் பலமாகப் பதிவு செய்துள்ளனர். இதற்கு பிரான்சில் பல நகரங்களில் இரண்டு நாட்கள் Auto école களின் சாலை எதிர்ப்புப் பேரணிகள் சாட்சி.

வாகன ஓட்டுனர் பரீட்சைக்காக காத்திருக்கும் கால அளவை 45 நாட்களாகக் குறைக்க அரசு எத்தனிக்கிறது. 2013ல் பரீட்சைக்கான காத்திருப்புக்காலமாக 98 நாட்கள் பதிவாகியுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே அமைச்சர் மேற்கூறிய திட்டத்தை பரிந்துரைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தவிர

- குறைந்தபட்ச கட்டாய வாகனப்பயிற்சி நேரமான 20 மணித்தியாலத்தை நீக்குதல்
- ஆரம்பப்பயிற்சியை தொலைதூர வகுப்புகள் மூலம் பயிற்றுவித்தல்

போன்ற புள்ளிகளும் வாகன சாரதி பயிற்சிநிலையங்களின் (Auto école) கோபத்துக்குக் காரணமாகும்.




## புகையிரதம், மற்றும் பேருந்துகளில்..

- 42% மான பயணிகள் பயணத்தின் போது புத்தகங்கள் படிக்கின்றனர்.
- 21% மான பயணிகள் தொலைபேசி மூலம் குறுந்தகவல் (SMS) அனுப்புகின்றனர்.
- 20% மான பயணிகள் இசையை ரசிக்கின்றனர்.
- 14% மான பயணிகள் சக பயணிகளுடன் உரையாடுகிறார்கள்.
- 12% மான பயணிகள் தூங்குகிறார்கள்.

### இவர்களுள் நீங்கள் எந்த ரகம்?

உங்கள் வாகனத்தேவைகளுக்கு
தொடர்புகொள்ளுங்கள்!

- விமானநிலையம்
- லூட்ஸ் திருத்தலம்
- பாரிஸ் சுற்றுலாத் தலங்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வாகனசேவை.

Tél.: 06.17.57.98.30

அன்பு நிறைந்த ஒருவர்,
மனிதர் படும் துன்பங்களைக்
காட்டிலும், விலங்குகள்
படும் துன்பத்தைச் சகித்துக்
கொள்ளமாட்டார்.
- ரோமெயின் ரோலந்து



# Mahajana Master English - Paris

## 4TH ANNUAL GRADUATION CEREMONY - APRIL 2015

## 4வது பட்டமளிப்பு விழாவும் விருது வழங்கலும்

- பாரீஸ் மாநகரின் மரபுவழி மாணவர் பாராட்டு விழாக்களில் இருந்து இது மாறுபட்டதுடன் எமது பெற்றோர்கள்,மொழித்துறை சார் வல்லுநர்கள் மற்றும் கலைஞர்களை ஒன்றிணைக்கும் ஒரு பாராட்டு விழா
- தமிழ் மாணவர்களின் எண்ணம், விருப்பம் என்பவற்றை மையப்படுத்துவதுடன் அவர்களின் உள்ளார்ந்த மொழித்திறமைகளுக்கான ஒரு சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தும் முயற்சி
- ஆங்கில மொழி கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் புதியதோர் அத்தியாயத்தை நோக்கிய பயணத்தில் 4வது ஆண்டு மைல்கல்

**CHIEF GUEST:**
**MR. BERNARD GIRBAL**
(REPRESENTATIVE OF THE BRITISH COUNCIL PARIS & THE UNIVERSITY OF CAMBRIDGE)

**SPECIAL GUEST:**
**MRS. BARBARA MCKERNAN**
(SPECIALISED IN ADDICTION STUDIES AT MAYNOOTH UNIVERSITY, DIRECTOR OF SERVICES FOR TERRAGLEN RESIDENTIAL CARE LIMITED, IRELAND)

**SPECIAL GUEST:**
**MR. DECLAN PEELO**
(TREASURER OF IRISH SRI LANKA FRIENDSHIP SOCIETY, IRELAND)

**GUEST OF HONOR:**
**MR. SIVANESAN RAMAMOORTHY**
(OLD STUDENT OF MAHAJANA COLLEGE- BATTICALOA DIRECTOR OF SERVICES- ISFS, IRELAND)

**HONORARY GUESTS :**

**MRS. GISSET DRAGIN**
(PRESIDENT- ASSOCIATION OF LUMIERE)

**MR. KRISHNAN**
(PRESIDENT- ASSOCIATION ACTC94)

**MR. ANANTHAROOBAN**
(PRESIDENT OF ASSOCIATION TAMIL VIRUDCHAM)

**MR & MRS. ESWARAN RADHA**
(OUR FIRST PARENTS OF MAHAJANA ME- PARIS)

**MR. THARMAPALAN**
(DIRECTOR OF STUDIES- ACTC94)


**MRS. SELLATHURAI ARUNTHAVAM**
(ON BEHALF OF MAHAJANA MASTER ENGLISH- PARIS)










Our Operational Partner Associations:

LUMIERE ACTC 94 TAMIL VIRUDCHAM

Our Principal Exam Collaborators:

BRITISH COUNCIL    UNIVERSITY OF CAMBRIDGE

**Media Sponsor:**

பரிஸ்தமிழ் .கொம் www.ParisTamil.Com    www.ariivalayam.com

**Time : Saturday the 25th of April 2015 at 2 pm**

**Venue : THEÂTRE ADYAR 4, Square Rapp, 75007 Paris (M° La Tour-Maubourg)**

நிகழ்ச்சி ஒழுங்கமைப்பும் உருவாக்கமும் : MAHAJANA Master English - Paris

Siret : 75065958300025


SITHI VINAYKA ADAIAKAM
பெண்கள் மற்றும்
ஆண்களுக்கான
அனைத்து ஆடைகளும்
தைத்துக் கொடுக்கப்படும்
புதுவருடத்தை முன்னிட்டு
அதிரடித்தள்ளுபடி
1 வாங்கினால் 2 இலவசம்
சித்திரைமுதல்
அழகு நிலையம்
8€
5€
25€
15€
பூமாலை செய்து தரப்படும்
அனைத்து வகையான நகைகளும்
வாடகைக்குத் தரப்படும்
மலிவு விலையில்
தொலைபேசி
அட்டைகள்
10€
Recharge
5€
20€
56, rue Philippe de Girard 75018 Paris
ஸ்ரீ மாணிக்க விநாயகர் அலயத்திற்கு முன்பாக
(Métro : La Chapelle)



# உலகின் முன்னுதாரணம் ! வாழ்வைச் சுவைக்கும் டென்மார்க் நகரம்!

**உலகில்** மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கேற்றவிதமாக டென்மார்க்கின் ஹொபன்காகென் நகரம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

குடும்ப வாழ்வை ஹொபன்காகென் நகர மக்கள் மகிழ்ச்சியாய் உணருகிறார்கள். பிள்ளைப்பேறின் போது தாய் அல்லது தகப்பனிற்கு 90வீத ஊதியத்தோடு ஒரு வருட விடுமுறையும் கிடைக்கின்றது. மழலையர் பள்ளி செலவுக்கான 75 வீதம் அரசினால் வழங்கப்படுகின்றது. குறைந்த அளவிலேயே மேலதிக வேலை செய்யவேண்டி இருப்பதால் பெற்றோர் குழந்தைகளுடன் அதிகநேரத்தைச் செலவிடமுடிகின்றது.

இவற்றிற்காக அதிகளவிலான வரியை டென்மார்க் அரசு அறவிட்டபோதும் அது அந்நாட்டுமக்களுக்கு சுமையாய் இல்லை. உலகில் கூடுதலான வரியை டென்மார்க் நாடே அறவிடுகிறது.

டென்மார்க், தலைநகர் பாதசாரிகள் மற்றும் சைக்கிள் பயணிகளுடன் மிகுந்த நட்பைப்பேணுகிறது. நாளாந்தம் 480000 மக்கள் துவிச்சக்கரவண்டியில் பயணிக்கின்றனர். உலகில் அதிகமானோர் சைக்கிளில் பயணம் செய்யும் நகர் ஹெபென்காகன் ஆகும். 350 கிலோமீற்றர் நீள–மான சைக்கிள் துணை பாதைகள் அங்குள்ளன. மக்கள் பொதுப்போக்குவரத்தை விட சைக்கிள் பயணத்தையே அதிகமாக விரும்புகின்றனர்.

நாட்டினது தற்போதைய நகர கொள்கையின்படி கட்டிடங்களின் கூரைகள் சிறு மரங்களாலும் செடிகளாலும் மூடப்பட்டிருக்கவேண்டும். அத்துடன் 90 சதவீதமான மக்கள் 15 நிமிடத்தில் நடந்து செல்லக்கூடிய பூங்காக்கள் அண்மையில் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

டென்மார்க்கின் தலைநகரம் முழுமையாக காபர்ன் துகள்கள் காற்றில் இல்லாத நகரமாக எதிர்காலத்தில் இருக்கும். 2025ம் ஆண்டு இதற்கான கால எல்லையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் மற்றைய நகரங்களை விட ஹொப்பன்காகென் மக்கள் இயற்கை உணவுகளையே கூடுதலாக உண்கின்றனர். அத்துடன் கடந்த இரண்டுஆண்டுகளில் உலகின் உயர் தரம் வாய்ந்த உணவகங்களின் எண்ணிக்கை இங்கு அதிகரித்த வண்ணம் உள்ளன.



## 2 யூரோ நாணயம் வேண்டாம்!

முதலாம் நெப்போலியன் பொனபார்ட் மன்னன் இறுதியாக பங்குபற்றிய போர்க்களம் Bataille de Waterloo என்பது அறிந்ததே. தற்போதைய பெல்ஜியத்தில் அமைந்துள்ள waterloo என்னுமிடத்தில் ஐரோப்பியக் கூட்டணிப்படைகளுக்கு எதிரான போரில் நெப்போலியனின் தலைமையிலான பிரான்ஸ் படையணிகள் பெருந்தோல்வியைச் சந்தித்தன. இப்போரும், நெப்போலியனின் பெருந்தோல்வியும் 18 யூன் 1815ல் நடந்தேறியது. ஒரு நாளில் மட்டும் 55 ஆயிரம் போர்வீரர்கள் உயிர் துறந்தனர். மன்னன் நெப்போலியனின் இத்தோல்வி பிரான்சில் இன்னமும் ஜீரணிக்க முடியாத வலியாகவே உணரப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்க waterloo போர் நடைபெற்ற 200 வருடத்தைச் சிறப்பிக்கும் முகமாக பெல்ஜியம் புதிய நினைவு இரண்டு யூரோ நாணயத்தை வெளியிடுவதற்கான கோப்புக்களை சமர்ப்பித்துள்ளது. இதையே பிரான்ஸ் தடுக்க முயற்சிகள் எடுத்து வருகின்றது. வோர்ட்டலோ போர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது தான் ஆனால் அது பிரான்சின் வீழ்ச்சி அதைக் கொண்டாட முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.




## மரணத்தின் பின்பும் பேஸ்புக் தொடரலாம்!

ஒருவர் இறந்த பின்னர் அவரது பேஸ்புக் கணக்கினை யார் பயன்படுத்துவது என்ற உரிமையை தேர்ந்தெடுக்கும் வசதியினை பேஸ்புக் அறிமுகப்படுத்தியுள்ளது. LEGACY CONTACT என்ற தேர்வு மூலம் ஒருவர் இறந்த பின்னர் அவரது பேஸ்புக் கணக்கினை பயன்படுத்துவதற்கு குடும்ப உறுப்பினரையோ அல்லது நண்பர் ஒரு–வரையோ இரண்டாம் உரித்தாக தெரிவு செய்யலாம்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் சுய விபரத்தையும், பதிவுகளையும் மாற்ற முடியும். ஆனால் தனிப்பட்ட செய்தி பரிமாற்றத்தினை (Chatting) பார்க்க முடியாது இவ்வசதியானது தற்போது அமெரிக்காவில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




# ஒஸ்காரில் ஓரங்கட்டப்பட்ட Boyhood

**நடந்து முடிந்த** 87வது ஒஸ்கார் விழா வழமைபோல் எதிர்பார்ப்புகளை ஏமாற்றாது வெற்றிகளை வாரி வழங்கியுள்ளது. இருப்பினும் சில படைப்புகள், படைப்பாளிகள் நிராகரிக்கப் பட்டுள்ளதாகவும் விமர் சனங்கள் எழுந்துள்ளன.
குறிப்பாக Boyhood திரைப்படம் இதுவரை பங்குபற்றிய திரைப்பட விழாக்களில் கோல்டன் குளோப் வரை சிறந்த இயக்குனர், சிறந்த திரைப்படம் எனப்பல விருதுகளை வென்றுள்ளது. ஒஸ்காரில் மட்டும் ஆறு பிரிவுகளில் பரிந்துரைக்கப் பட்டிருந்தும் சிறந்த துணை நடிகை விருதோடு மட்டும் கண்டு கொள்ளாமல் ஓரங்கட்டப்பட் டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க இயக்குனர் Richard Linklater இயக்கத்தில் வெளியான Boyhood திரைப்படத்துக்கு பல பெருமைகளுடன் ஒரு தனித்துவமும் உண்டு. 2002ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட படப்பிடிப்பு தொடர்ந்து 12 வருடங்கள் திட்டமிட்டபடி இடைவெளி விட்டு விட்டு ஒரே நடிகர்கள் தொழில்நுட்பக் கலைஞர்களுடன் 2013ம் ஆண்டுவரை தொடர்ந்து, 2014ல் திரைப்படம் வெளியானது.

Boyhood திரைப்படமானது விவாக ரத்துப் பெற்ற தாயொருவரால் வளர்க்கப்படும் ஒரு சிறுவனின் இளமைக்காலம் கால, வயது மற்றும் இடமாற்றங்களுடன் நகர்கிறது. திரைப்பட நாயகனான Manson ஆறு வயதில் பெற்றோர் விவாகரத்துப் பெற்றுவிட தனது தாயா ருடனும் மூத்த சகோதரியுடனும் வாழ்கிறான். இட நகர்வுகள், புதிய நண்பர்கள், பாடசாலைகள், அம்மாவின் மாறும் காதலர்கள் என போராட்டம் நிறைந்ததாய் தொடர்கிறது அவன் வாழ்க்கை. வாழ்வின் ஏற்ற இறக்கங்களுடனான ஒரு சிறுவனின் வாழ்க்கையே இத்திரைப்படம். 6 வயதில் ஆரம்பித்து 18 வயதில் படம் முடி–வடைகிறது.

2மணி 40 நிமிட திரைப்படத்தில் திடீர் திருப்பங்கள், விறுவிறுப்புகள், மாறுபட்ட கோணங்கள், பாரிய தயாரிப்பு என்று எதுவுமில்லை. இருப்பினும் இத்தகைய எந்தவொரு முன்னெடுப்புகளுமில்லாததே இத் திரைப்படத்தின் முழுப்பலம் எனத் தெரிவித்துள்ள கார்டியன் பத்திரிகை Boyhood நிச்சயமாக 2014ன் சிறந்த திரைப்படம் மட்டுமல்ல இந்த நூற்றாண்டின் சிறந்த திரைப்படங்களில் ஒன்று எனவும்புகழாரம் சூட்டியுள்ளது.

## தொலைத் தொடர்புச் சேவையில் இன்னுமோர் மைல்கல் வாட்சிம்

WhatSim

பேஸ்புக் மற்றும் டுவிட்டருக்கு அடுத்தபடியாக உலகளவில் அதிக பயன்பாட்டிலிருப்பது வாட்ஸ் அப். வாட்ஸ் அப் இல்லாத சிமாட் போனே இல்லை. இதனை பயன்படுத்துவதற்கு இணைய வசதி இன்றியமையாதுள்ளது. ஆனால் இணைய வசதியின்றி பயன்படுத்தவே முடியாதா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தொலைத்தொடர்பு சேவையில் ஒரு மைல்கல்லாக அமைந்ததுதான் வாட்சிம்.

இத்தாலியைச் சேர்ந்த சீரோ மொபைல் (Zero Mobile) நிறுவனத்தினர் கண்டு பிடித்துள்ள வட்சிம் உலகிலுள்ள 150நாடுகளில் 400க்கும் அதிகமான மொபைல் சேவை வழங்குனருடன் இணைந்து பயன்பாட்டிலுள்ளது.
நமக்கருகில் ஒரு மொபைல் சிக்னல் நன்றாக இருந்தால் போதும். இது தானாக இயங்க ஆரம்பித்து விடும். மேலும் உலக நாடுகளுக்கு பயணம் செய்பவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. ஏனெனில் இதற்கு ரோமிங் கட்டணம் அறவே இல்லை இதுவே இதன் சிறப்பம்சமாகும் மேலும் Contact மற்றும் location ஐ எதுவித கட்டணமுமின்றி பகிர்ந்து கொள்வதோடு வட்ஸ்அப் உடனும் இணைந்திருக்கலாம்.

வட்சிம்மானது 10€ விற்கு சந்தையில் கிடைக்கூடியதாக உள்ளது. www.whatsim.com/en/whatsim என்ற தளத்திற்கு செல்வதன் மூலம் வட்சிம்மினை கொள்வனவு செய்ய முடியும்.







பிள்ளைகளின் சுமைதாங்கிகள்
பிள்ளைகளின் செங்கோல்கள்
பிள்ளைகளின் அச்சாணிகள்
பிள்ளைகளின் சூரியன்கள்
பிள்ளைகளின் திசைகாட்டிகள்
பிள்ளைகளின் ஆசிரியர்கள்
பிள்ளைகளின் நம்பிக்கைகள்!

- தீபிகா -

சங்கீதா அச்சகம்
01.44.72.08.94

# பிரான்ஸ் பழையமாணவர் சங்கங்களின் ஒன்றியம்

## அங்குரார்ப்பணக்கூட்டம்

**சங்கத்தின் நோக்கம் :**

- வெளிநாடுகளில் பழையமாணவர் சங்கங்கள் இல்லாத இலங்கையின் வடகிழக்கு பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு உதவுதல்
- திறமையிருந்தும் பொருளாதார நெருக்கடிகளால் அவதியுறும் மாணவர்களுக்கு உதவுதல்
- மேற்குநாடுகளின் கல்விமுறைகளிலுள்ள சிறப்பம்சங்களை எமது நாடுகளுக்கும் பரவச்செய்தல்.
- புலம்பெயர் நாடுகளிலுள்ள எமது வளரிளம் மாணவர் சமூகங்களை எமது நாட்டிலுள்ள மாணவர்களினுடனான இணைப்பிற்கு முயற்சித்தல்.


காலம் :

**24. 05.2015**

ஞாயிறு பி.ப.3.00 மணி

இடம் :

**5, Rue Pierre l'Ermite**
**75018 PARIS**
M°: La Chapelle



**ஆர்வமுள்ள அனைத்துப் பாடசாலை பழையமாணவர்களையும் அழைக்கிறோம்.**

தொடர்புகளுக்கு :

- புனித பத்திரிசியர் கல்லூரி ப.மா.ச.,
- சாவகச்சேரி இந்துக்கல்லூரி ப.மா.ச.
- வேலணை கிழக்கு மகாவித்தியாலய ப.மா.ச.
- சென்.ஜேம்ஸ் ப.மா.ச
- மகாஜனக்கல்லூரி ப.மா.ச.
- வேலணை மத்தியகல்லூரி ப.மா.ச.




Tel : 0139808523 / 0613062029 / 0601886182. e.mail: baby.ballon@live.fr
htpp:/www.facebook.com/ballon.pakianathan

# Google ன் செல்லக்குழந்தை YouTube ற்கு வயது பத்து!



"உங்களை வெளிப்படுத்துங்கள்"



**யூ ரியுப்பும், கூகுளும்** இன்று பெரும்பாலானோரின் இன்றியமையாத மையங்களாகி விட்டன. ஏதாவதொரு அறிவியல் தகவல் அல்லது காணொளி தேவையென்றவுடன் விரல்கள் தாமாகவே கூகுள், யூ ரியுப் தளங்களுக்குள் தேடத் தொடங்கி விடுகின்றன. அந்தளவுக்கு அவை எம்முள் ஐக்கியமாகிக் கொண்டு விட்டன.

இவ்வளவற்றிக்கும் யூரியுப் தளம் ஆரம்பிக்கப்பட்டு வெறும் பத்து ஆண்டுகள் தான்.

2005 பெப்ரவரி 14ம் நாள் Youtube வீடியோத்தளம் ஆரம்பமானது. 2005ம் ஆண்டு Paypal மின் பணப்பரிமாற்ற நிறுவனத்திலிருந்து வெளியேறிய மூன்று நண்பர்களால் Youtube இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் அபாரவளர்ச்சியைக் கவனித்த Google ஆண்டவர் 2006ம் ஆண்டு 1.65 மில்லியாட் யூரோக்களைக் கைமாற்றி தனதாக்கிக் கொண்டார். இன்று அது Google ன் செல்லக்குழந்தை.



Youtube ன் தலைமைப்பதவியை வகிக்கும் Susan Wojcicki Google ஆண்டவருக்கு மிகவும் வேண்டப்பட்ட பெண்மணியாகும். இவர் வேறுயாருமல்ல 1998ல் Google கடவுளின் தோற்றத்திற்கு தனது வீட்டு கராஜ்ஜை(Garage) வாடகைக்கு விட்ட உரிமையாளினியாகும்.

Youtube இன்று ஒரு மில்லியாட் பாவனையாளர்களுடன் 75 நாடுகளில் 61 மொழிகளில் சேவையிலுள்ளது. ஈரான், துருக்கி, வடகொரியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1 நிமிடத்துக்கு 300 மணிநேர வீடியோக்கள் பதிவேற்றப்படுகின்றன. திரண்டு கிடக்கும் ஆறு மில்லியாட் மணி நேர வீடியோக்களைப் பார்த்து முடிக்க பூமிபபந்திலுள்ள அத்தனைபேரும் ஒருமணிநேரம் செலவழித்தால் தான் சாத்தியம் எனப்பெருமை பேசி நிற்கின்றது.

**யூரியுப்பில் நிமிடத்துக்கு 300 மணிநேர வீடியோக்கள் பதிவேற்றப்படுகின்றன.**

இந்த 10 வருடங்களுள் வீடியோக்களின் தரத்திலும் சரி, ஈட்டும் வருமானத்திலும் சரி தனி இடத்தைப் பிடித்து விட்டது. Youtube தளத்தில் வெளியாகும் விளம்பரங்களில் ஆயிரம் கிளிக்குகளுக்கு 4.80 யூரோக்கள் என விளம்பரதாரர்களுக்கு பணமும் கொடுக்கின்றது.

Youtube ன் 80 சதவீதமான சேவை அமெரிக்காவிற்கு வெளியேதான். இருப்பினும் வெவ்வேறு நாடுகளில Youtube சேவைக்கு இணையான போட்டித்தளங்களை விலை பேசு- வதில் Google ஆண்டவர் எப்போதும் ஆர்வம் காட்டியே வருகிறார். பிரான்சின் போட்டித்தளமான Dailymotion உடன் பல காலமாக பேரம் பேசி வருவது நல்ல உதாரணம்.

மிகச்சிறிய இரண்டு செக்கன் வீடியோ முதல் மிக நீளமாக 596 மணிநேர வீடியோ வரை அப்லோட் செய்யப்பட்டுள்ளது. முதலாவது வீடியோ 23 ஏப்ரல் 2005ல் தளத்தின் துணை நிறுவனரான Jawed Karim ஆல் ஏற்றப்பட்டது. பத்துவருடங்களில் அதிகம் பார்வையிடப்பட்ட வீடியோக்கள் இசை வீடியோக்களாகும். அசைக்க முடியாது முதலாவது இடத்தில் 21 டிசம்பர் 2012ல் ஏற்றப்பட்ட PSY பாடகரின் Gangnam Style வீடியோவாகும். இவ்வளவு காலத்தில் முதல் முறையாக 1 மில்லியாட் பார்வையாளர்களைத் தக்க வைத்ததும் இன்று 2.3 மில்லியாட் ரசிகர்களைக்கவர்ந்து விட்டதும் அதிக Like குகளை அள்ளியதும் தென்கொரியாவைச் சேர்ந்த PSY ன் Gangnam Style ஆகும். அத்துடன் இவரின் இரண்டு பாடல்கள் முதல் பத்துக்குள் இடம்பிடித்துள்ளன.




பிரான்சிற்கான அதிகாரபூர்வ Youtube தளம் 2007 யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அதிகம் பார்க்கப்பட்ட "பிரெஞ்சு" வீடியோவாக 2013ல் ஏற்றப்பட்ட பாடகர் Stromae ன் «Papaoutai» பாடல் முன்னிலையிலுள்ளது.

எவ்வளவு போட்டி வீடியோ ஏற்றுத்தளங்கள் வந்தாலும் Youtube ன் கோசமான "உங்களை வெளிப்படுத்துங்கள்" (Broadcast yourself) நீடூழி வாழும் என்பது இணையத் தொழில்நுட்பத்துறையினரின் அசைக்க முடியாத கருத்தாகும். ஏனெனில் Youtube கடவுளின் குழந்தை.


**மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பின்**
**வருடாந்த ஒன்றுகூடலும் சீட்டிழுப்பும்**
**10.05.2015**
**இடம் : ஒப்புரவு அன்னை ஆலயம்**
Métro : Belleville)


**ஒழுக்கம் :-**
பிறரிடம் எதை எதை எதிர்பார்கிறீர்களோ
அதை நீங்கள் பிறருக்குச் செய்வதே ஒழுக்கம்


**தமிழர் விளையாட்டுக்கழகம் -93**
வழங்கும்
அமுதவேளை -11
**05.04.2015 ஞாயிறு**




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# சீயோன் சுவிசேஷ சபை

## ஏப்ரல் மாத விசேஷித்த ஆராதனைகள்

**03.04.2015**

**பெரிய வெள்ளி ஆராதனை**

இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 5 மணிவரை

**05.04.2015**

**உயிர்த்த ஞாயிறு ஆராதனை**

மாலை 3 மணிக்கு

பாஸ்டர் : ஆரோன் கணேசன் (மலேசியா)

தேவசெய்தி கொடுக்க வருகிறார்

இடம் : தலைமை சபை

**ஏப்ரல் 06 லிருந்து 12 வரை**

**தேவஊழியர் பாஸ்டர். நெல்சன்** (மலேசியா)

தேவசெய்தி கொடுக்க வருகிறார்.

**ஏப்ரல் 13 லிருந்து 19 வரை**

**பாஸ்டர் ஜோன்ராஜ்** (சிவகாசி, இந்தியா)

தேவசெய்தி கொடுக்க வருகிறார்

**ஏப்ரல் 25 - 26**

தேவனால் இன்று உலகமெங்கும் பயன்படுத்தப்படும் தேவஊழியர்

**பாஸ்டர். அல்பேட் சலமன்** (இந்தியா)

அவர்கள் துதி ஆராதனையும், தேவசெய்தியும் கொடுக்க வருகிறார்.

**ஏப்ரல் 29,30 மே 1,2,3**

இலங்கை யாழ். புதுவாழ்வு சீயோன் சுவிசேஷசபையின் 3வது ஆண்டுநிறைவு விழா நடைபெறுகிறது.

இவ் ஆராதனைகளில் பங்குபற்றி தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள்

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

கீழ்குறிப்பிட்ட இடங்களில் ஆராதனை நடைபெறும்

## சபை ஆராதனை நடைபெறும் இடங்கள்

Stade de France — **Les lieux de cultes** — Stade de France

### தலைமைச்சபை Eglise Principale

**தமிழ் ஆராதனை**

இடம் :
Assemblée Chrétienne du bon berger
215, avenue du président Wilson - 93210 La Plaine Saint Denis
RER'B' (La Plaine Stade de France)
RER 'D' (Stade de France St.Denis)
Métro:Porte de la Chapelle இல் இருந்து பஸ் 153 5வது தரிப்பிடம் Pont de Soissons, Inter-Hôtel முன்பாக
தொடர்புகளுக்கு :
06 99 11 19 68, 06 64 93 62 37 / 06 07 54 40 62,
06 61 18 95 30, 01 49 98 23 20
ஞாயிறு மாலை 4 மணிக்கு தமிழ் ஆராதனை

**Réunion En Français**

Lieu :
Assemblée Chrétienne du bon berger
215, avenue du président Wilson - 93210 La Plaine Saint Denis
RER'B' (La Plaine Stade de France)
RER 'D' (Stade de France St.Denis)
Métro: Porte de la Châpelle / Bus : 153 5éme arrêts
Pont de Soissons, Inter-Hôtel
Contacts :
06 50 82 36 20, 06 26 36 11 08 / 01 49 98 23 20, 06 61 18 95 30
**Dimanche 15h en français**

### கிளைச்சபைகள் Eglises Branches

**Viry-Châtillon சபை**

விசேஷித்த ஆராதனை :
சனி, ஞாயிறு மாலை 3.00 மணிக்கு தமிழ் ஆராதனை
Dimanche: Réunion en français 14h00
இடம் : 16 Rue de Ris
91170 Viry-Châtillon
RER-D, Viry-Châtillon
தொடர்புகளுக்கு:
06 58 33 65 13 06 51 12 65 85,
06 61 18 95 30 01 49 98 23 20

**Gien சபை**

ஆராதனை :
ஞாயிறு காலை 9.00 மணிக்கு
தொடர்புகளுக்கு :
02 38 67 80 72, 06 03 79 58 02
06 61 18 95 30, 01 49 98 23 20

**மேலதிக தொடர்புகளுக்கு**

eesion@aol.com

06 99 11 19 68, 06 26 93 37 91
06 61 18 95 30, 01 49 98 23 20

**Noisy-le Grand சபை**

விசேஷித்த ஆராதனை :
ஞாயிறு மாலை 3.00 மணிக்கு
Dimanche: Réunion en français 14h00
இடம்: Centre Chrétien d'Evangélisation
19A, rue de l'Université
93160 Noisy le Grand
RER-A : Noisy-le Grand
தொடர்புகளுக்கு:
06 03 79 58 02, 02 38 67 80 72
06 61 18 95 30, 01 49 98 23 20

Jésus t'aime

# சீயோன் சுவிசேஷ சபை
## EGLISE EVANGELIQUE DE SION

PARIS - FRANCE N°. D'ENREGISTREMENT : 1/00084

சகரியா 4:6 — Zacharie 4:6

# கோபால் அன் கோ

# GOPAL & CO




## மலிவு விற்பனை

| | |
|---|---|
| ஆச்சி மிளகாய்த்தூள் 500g<br>(1வாங்கினால் 1இலவசம்) | ➧ 3.99 |
| நெத்தலி கருவாடு<br>(1வாங்கினால் 1இலவசம்) | ➧ 2.99 |
| கோழிக்கால் (Cuisse de Poulet) 10Kg | ➧ 13.90 |
| 5 தேங்காய்ப்பால் ரின் | ➧ 4.50 |
| 3 ரின்மீன் | ➧ 4.50 |

இலங்கை,இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிகள்

அனைத்தும் மலிவு விலையில்.....

வாடிக்கையாளர் வசதி கருதி ....

இலங்கை இந்தியாவிற்கு மிகக் குறைந்த விலையில் கதைப்பதற்கு Kish Mobile!




**லாச்சப்பலில்...**
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle

**பொபினியில்...**
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme

**Tél : 09 51 56 76 52    Fax : 01 46 07 13 03**



# பயணச்சீட்டின்றி பயணிப்போர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

- SNCF **நிர்வாகம்**

*பிரான்சின் நீள்தூர போக்குவரத்து SNCF ல் பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்போரின் தொகை அதிகரித்து வருகிறது. இதனால் வருடாந்தம் 300 மில்லியன் யூரோக்கள் இழப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு SNCF நிர்வாகம் புதிய அபராத முறைகளில் கடும்போக்கை கடைப்பிடிக்க தீர்மானித்துள்ளது.*

*ஒருவர் பயணச்சீட்டு இன்றி பயணித்தால், இதுவரை பயணச்சீட்டின் விலையுடன் கூடுதலாக 25 முதல் 35 யூரோ வரையான அபராதமே அறவிடப்பட்டது. இனி அது 50 யூரோவாக உயர்கிறது. உடனடியாக பணம் செலுத்தாத பட்சத்தில் இதுவரை 55 யூரோவாக இருந்த அபராதத்தொகை 100 யூரோக்களாக உயர்கிறது. 150 கிலோமீற்றருக்கு கூடுதலான தூரம் பயணிப்போருக்கு அபராதத்தொகை இன்னும்அதிகரிக்கும்.*

*பயணச்சீட்டின்றி பயணித்து வண்டியில் பயணச்சீட்டினைக்கோருவோருக்கு இதுவரை கூடுதல் அறவீடாக 4 முதல் 10 யூரோக்கள் வரை அறவிடப்பட்டது. இனி 7 முதல் 15 யூரோவாக அது மாற்றம் பெறுகிறது. இவ்வுயர்வால் 5 மில்லியன் யூரோக்கள் வரை இலாபம் ஈட்டலாம் எனக்கணிக்கப்படுகிறது. உடனடியாக அபராதம் செலுத்தாது பற்றுச்சீட்டுடன் வெளியேறுவோரில் வெறும் 11.6 சதவீதத்தினரே பணம் செலுத்துவதாகவும், அதிகமானோர் கொடுக்கும் வதிவிட முகவரிகள் பொய்யானவை எனவும் SNCF நிர்வாகம் தகவல் தருகிறது. ஒரு நபர் இவ்வாறு தொடர்ந்து நடந்து கொண்டால் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 6 மாதச்சிறைத்தண்டனையும், 7500 யூரோ அபராதத்திற்கும் உட்படுத்தப்படுவர்.*


## Sachchi Education – Annamalai University

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

சிறுவர்–பெரியோர் அனைவருக்கும் நுண்கலைக் கற்கை

பரதநாட்டியம் – குரலிசை – மிருதங்கம்

கீ.போர்ட் – வயலின் – வீணை – தேவாரம்

**கற்கை நெறிகள்**



- **தரச்சான்றிதழ் படிப்பு** - Grade Certificate Programmes
- **சான்றிதழ் படிப்பு** - Certificate Programmes
- **நாட்டியக் கலைமணி** - Nattiya kalaimani
- **நட்டுவாங்கக் கலைமணி** - Nattuvanga kalaimani
- **இசைக் கலைமணி** - Isai kalaimani
- **இளங்கலை** - Bachelor of Bharathanatyam/Music in Vocal/ Mruthangam/ Veena.
- **முதுகலை** - Master of Bharathanatyam/Music in Vocal/ Mruthangam/ Veena

70, rue Philippe de Girard 75018 PARIS Tél : 01 46 07 16 00 sachchithananthaam@gmail.com



## நிலா

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**ராக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

SARL VARNISHA COIFFURE
111, rue de l'Ouest - 75014 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**Karan Coiffure**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**ஞானமணி பல்பொருள் அங்காடி**
218, Rue. Anatole Francy - 93 Drancy

**அம்பாள் ஸ்ரோஸ்**
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்**
Le Blanc Mesnil

**அஷ்டலக்சுமி கோயில்**
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)


**மகிழ்ச்சியில் மிகப்பெரிய மகிழ்ச்சி பிறரை மகிழ்ச்சிப் படுத்திப் பார்ப்பதுதான்**




# நெருக்கடியை எதிர்நோக்கும் பிரான்சின் எரிசக்தி நிறுவனம்

**பிரான்சில்** பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. பிரான்சின் பன்னாட்டு எரிசக்தித்துறை நிறுவனமான Areva ம் ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துவரும் Total, Peugeot, Arcelormittal போன்ற பாரிய நிறுவனங்களின் பட்டியலில் இணைந்துள்ளது. குறிப்பாக அணுமின் நிலையச் செயற்பாட்டாளர்களான Areva 2014ல் மட்டும் 5 மில்லியாட் யூரோக்கள் இழப்புகளைச் சந்தித்துள்ளனர். இப் பெரும் இழப்பைச் சரி செய்ய உடனடி நடவடிக்கையாக ஒரு மில்லியாட் யூரோக்கள் சேமிக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

2011 ல் ஜப்பானில் சுனாமியால் ஏற்பட்ட அணுமின் நிலைய அனர்த்தங்களுக்குப்பின்னான மந்தநிலையே தம்மையும் தாக்கியுள்ளதாக Areva தெரிவித்துள்ளது.

43 நாடுகளில் 45 ஆயிரத்துக்கும் அதிகமான பணியாளர்களைக் கொண்ட Areva நிறுவனத்தில் வேலை இழப்புகள் எதுவும் நடக்காது எனவும் பிரான்ஸ் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றும் Areva நிறுவனத்தை விழ விடாமல் தடுப்பது எமது கடமை எனவும் 87 சதவீதப் பங்குதாரரான பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.

UNIVERSITÉ PARIS SORBONNE PARIS IV

## பிரான்சுக்கு பெருமைசேர்க்கும் பல்கலைக்கழகங்கள்







**இங்கிலாந்தின்** Times Higher Education ஆய்வகம் வெளியிட்டுள்ள தரப்படுத்தல் பட்டியலில் பிரான்சின் ஐந்து பல்கலைக்கழகங்கள் முதல் நூறுக்குள் இடம்பிடித்து பிரான்சிற்கும் பிரான்சின் கற்பிதத்துக்கும் பெருமை சேர்த்துள்ளன. தொடர்ந்து 13வது வருடமாக அமெரிக்க Harvard பல்கலைக்கழகம் முதலாம் இடத்தில் கோலோச்சி வருகின்றது. Cambridge இரண்டாமிடத்தையும் Oxford மூன்றாமிடத்தையும் தக்கவைத்துள்ளன. 150 நாடுகளில் 10500 பல்கலைக்கழகங்களைத் தரப்படுத்தியே இம் முதல் நூறு பல்கலைக்கழகங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. முதல் நூறுக்குள் அமெரிக்காவின் 43 பல்கலைக்கழகங்களும் இங்கிலாந்தின் 12 பல்கலைக்கழகங்களும் இடம்பிடித்துள்ளன.

பிரான்சின் சிறந்த ஐந்து பல்கலைக்கழகங்கள் :

1. Panthéon - Sorbonne - Paris 1
   (51ème - 60ème rang)
2. Paris 4 - Sorbonne - Paris 1
   (51ème - 60ème rang)
3. Ecole normale Supérieure
   (61ème - 70ème rang)
4. Ecole Polytechnique
   (91ème - 100ème rang)
5. Institut Pasteur
   (91ème - 100ème rang)

**சங்கீதா அச்சகம் - 01.44.72.08.94**
39, Bld la Chapelle - 75010 Paris. Métro : La Chapelle

V.S. கிருஷ்ணபிள்ளை
(மாயவர்)
மொழிபெயர்ப்பாளர்
சகல நீதி, நிர்வாக சேவைகளால் ஏற்றுக்கொள்ளப்படும் மொழிபெயர்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.
புதிய முகவரி :
7, Rue Perdonnet - 75010 Paris
M°: La Chapelle / Gare du Nord
[அறிவாலயம் புத்தகசாலைக்கு அருகில்]
Tél./ Fax : 09.82.24.78.98
Mob : 06.86.38.10.57



## லாச்சப்பல் அகதிமுகாம்

ஒவ்வொரு முறையும் இத்தாலியத்தீவுகளில் அகதிகள் வந்திறங்கும் போதெல்லாம் பாரிசிலும் அதன் அலை அடிக்கத்தான் செய்கிறது. குறிப்பாக லாச்சப்பல் மெத்ரோ பாலத்துக்குக் கீழ் வீட்டு வசதியற்றவர்கள் மற்றும் அகதிகள் கூடாரங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து ஒரு அகதி முகாமுக்கான தோற்றத்தைப் பெற்றுவிட்டதாக France - Terre d'asile அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. பட்டாம் பூச்சி விளைவு (Effet papillon) என இது வர்ணிக்கப்பட்டுள்ளது. பெரும் பகுதியினர் சூடான் நாட்டைச் சேர்ந்தவர்களாகும். இங்கிலாந்துக்குச் செல்வதற்கான ஒரு வழி நிறுத்தமே இந்த லாச்சப்பல் முகாங்களாகும். பாரிசில் தற்காலிக வதிவிட உரிமங்களைப் பெற்று விட்டால் பின்னர் Calais வரைச் செல்ல முடியும். பின்னர் அங்கிருந்து இங்கிலாந்துக் கனவுகளைத் தொடர முடியும். கவலைக்கிடமாக பெரும்பாலானோருக்கு இக்கனவு நனவாவதில்லை எனவும் அகதிகளாகப் புறப்பட்டு கடும் குளிரோடு பெரும் போராட்டங்களுக்கு முகம் கொடுக்கும் இம் மக்களுக்கு பிரான்ஸ் உதவ வேண்டும் எனவும் France - Terre d'asile அமைப்பு வலியுறுத்தியுள்ளது.